# கோவிட் - 19 மூன்றாவது அலை

# அடுத்தாண்டு வரை நீடிக்கும்!



கோலாலம்பூர், அக்.20-

உலகத்தை உலுக்கி வரும் கோவிட் - 19 தொற்றின் தாக்கம் இந்நாட்டில் அடுத்தாண்டு தொடக்கம் வரை நீடிக்கும் என்று சுகாதார நிபுணர் ஒருவர் கூறினார்.

முதலாம், இரண்டாம் அலைகளைவிட இந்த மூன்றாவது அலை நீண்ட நாள் நீடிக்கும் என்று தொற்றுநோய் நிபுணர் டாக்டர் அகமட் ஜாயிட் ஃபாத்தா அஸ்மான் கூறினார்.

கோவிட் - 19 தொற்று நீண்ட காலம் வரை மக்களிடையே பரவி வரும் என்றும் அவர் சொன்னார்.

பல்வேறு அம்சங்களை முன்வைத்தே இத்தொற்று மக்களிடையே பரவுவதைத் தடுக்க முடியும் என்று புத்ரா மலேசிய பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பிரிவின் முதிர்நிலை விரிவுரையாளருமான அவர் சொன்னார்.

இவ்வாண்டு இறுதிக்குள் கோவிட் - 19 தொற்றுக்கான தடுப்பூசி கண்டு பிடிக்கப்பட முடியுமா என்பது தெரியாது.

எனவே, இத்தொற்று அடுத்தாண்டு தொடக்கம் வரை தொடர்ந்து பரவிக் கொண்டிருக்கும் என்றும் அவர் சொன்னார்.

கோவிட் - 19 தற்போது நாட்டில் அதிகமானோருக்கு பரவி வருவதால் அரசாங்கம் இன்னும் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

இன்னும் இரண்டு வாரங்களில் இத்தொற்று இன்னும் அதிகமாக பரவி வந்தால், அது நாட்டிலுள்ள மருத்துவமனைகளை மேலும் செயலிழக்கச் செய்து விடும் எனவும் அவர் எச்சரித்தார்.

நாட்டில் கோவிட் - 19 தொற்று அதிகமாக பரவி வருவதற்கு மக்கள் எஸ்.ஓ.பி. எனப்படும் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கை செயல்முறையை முறையாக கடைப்பிடிப்பதும் ஒரு காரணம் என்பதை அவர் மறுக்கவில்லை.

பொதுமக்கள் அதன் விதிமுறைகளை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். இல்லையேல் அது வரும் 2022ஆம் ஆண்டுவரை நாட்டை உலுக்கி வரும் எனவும் அவர் எச்சரித்தார்.